**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.53/2024**

நாள்.23.07.2025

**வா.சா.1. பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் ABT பார்சல் சர்வீஸ் வைத்துள்ளேன். அந்த நிறுவனத்தின் பதிவு எண் எனக்கு தெரியாது. எனது மனைவியின் பெயரில் உள்ளது. அதில் நான் வேலை செய்கிறேன். இது இல்லாமல் நான் வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. எனக்கு மாதம் சம்பளமாக ரூ.8,000/– கிடைக்கிறது. அது தவிர டோர் டெலிவரி செய்யும் போது ரூ.200 முதல் 300 வரை தினந்தோறும் கிடைக்கும். எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளார்கள். அவர்கள் இருவரும் கல்லூரியில் படித்து கொண்டு வருகிறார்கள். எனது பிள்ளைகளுக்கு நான் தான் செலவு செய்து வருகிறேன். வீட்டிற்கு தேவையான மளிகை சாமான்கள் மற்றும் பொருள்களை குடும்பத்தலைவர் என்ற முறையில் நான் தான் வாங்கி கொடுக்கிறேன் என்றால் எனது மனைவி தான் வாங்கி கொடுக்கிறார். சோழா சிட்பண்ட் என்ற நிறுவனத்திற்காக நான் வேலை பார்த்து அதனடிப்படையில் தினந்தோறும் திருத்துறைப்பூண்டி டவுனில் உள்ள சந்தாதாரர்களிடம் பணம் வசூல் செய்து கொடுப்பேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் பிரதிவாதியின் கடைக்கு முடி வெட்டிக் கொள்வதற்காக சென்று வரும்போது தெரியும். திருத்துறைப்பூண்டியில் 50–க்கும் மேற்பட்ட சலூன்கள் இருக்கும்பட்சத்தில் பள்ளங்கோவிலில் உள்ள பிரதிவாதியின் கடைக்கு செல்வதன் மூலம் பிரதிவாதியை தெரியும் என்று சொல்வது வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் வீட்டிற்கு நான் சென்றதில்லை. கடந்த 05.07.2023–ல் ரூ.1,00,000/– தொகையினை எனது அலுவலகமான ABT பார்சல் சர்வீஸ் என்ற அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். பணம் கொடுக்கும்போது செல்வகுமார், சுந்தர்ராஜ் ஆகியோர் இருந்தார்கள். சாட்சிகள் எனது அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறார்களா

என்றால் எனக்கு தெரிந்தவர்கள். மேற்படி தொகையினை வங்கியிலிருந்து கொடுத்தீர்களா அல்லது எவ்வாறு கொடுத்தீர்கள் என்றால் நான் சேமித்து வைத்ததிலிருந்து கொடுத்தேன். எனது ABT பார்சல் சர்வீஸ் என்ற நிறுவனத்திற்கு சிட்டி யூனியன் வங்கியில் கணக்கு வைத்து பராமரித்து வருகிறோம். எனக்கு இந்தியன் வங்கி, திருத்துறைப்பூண்டி கிளையில் கணக்கு உள்ளது. பிரதிவாதியிடம் நான் பணம் கொடுக்கும்போது 500 ரூபாய் நோட்டுகளும், 100 ரூபாய் நோட்டுகளும் கொடுத்தேன். 500 ரூபாயில் எத்தனை நோட்டுகளும், 100 ரூபாயில் எத்தனை நோட்டுகளும் கொடுத்தேன் என்றால் ஞாபகமில்லை. பணம் கொடுத்த அன்றே பிரதிவாதி எனக்கு புரோநோட் எழுதிக்கொடுத்துவிட்டார். மாதம் எவ்வளவு வட்டி பேசப்பட்டது என்றால் ஒரு பைசா வட்டி. மாதம் 1000 ரூபாய் வட்டி வாங்கினேன். வட்டித்தொகை வாங்கியது தொடர்பாக நோட் வைத்து பராமரித்து வருகிறேனா என்றால் இல்லை. கடைசியாக 05.12.2023–ம் தேதி வட்டிப்பணம் வாங்கினேன். மொத்தமாக எனக்கு இதுவரை எவ்வளவு வட்டிப்பணம் வாங்கியுள்ளேன் என்றால் ரூ.5,000/– வாங்கியுள்ளேன். பிரதிவாதி என்னிடம் கொடுத்த புரோநோட்டுகளை யார் பூர்த்தி செய்தார்கள் என்றால் சாட்சி செல்வகுமார் பூர்த்தி செய்தார். புரோநோட்டில் உள்ள அனைத்து சங்கதிகளையும் செல்வகுமார் பூர்த்தி செய்தார். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியிலேயே தாவா புரோநோட் பூர்த்தி செய்யப்பட்டது. தாவா புரோநோட்டில் யார் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் பிரதிவாதி தமிழில் கையொப்பம் செய்து கொடுத்தார். அந்த கையொப்பத்தில் பிரதிவாதியின் இனிசியல் போடப்பட்டிருந்ததா என்றால் போடப்பட்டிருந்தது. அந்த இனிசியல் ஆங்கிலத்தில் இருந்தது. பிரதிவாதியின் கையொப்பத்தை இதற்கு முன்பு எங்கேயாவது பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

**<u>பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.